//மிக மிக அவசரம் // //தனி கவனம்//

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின்(தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை - 6.**

**ந.க.எண்.76896/பிடி1/இ3/2017, நாள் .18.03.2022**

**பொருள் :** பள்ளிக்கல்வி - தமிழ் நாட்டில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் 6029 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் இன்டர்நெட் மற்றும் கணினி வசதியுடன் கூடிய உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்டது - ஆய்வகங்களின் தற்போதைய நிலை – அறிக்கை கோருதல் - சார்பு.

**பார்வை :** தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது, நாள்: 08.03.2022

------

தமிழ் நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் 6029 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் இன்டர்நெட் மற்றும் கணினி வசதியுடன் கூடிய உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்டு மாணவர்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையில் 08.03.2022 அன்று நடைபெற்ற அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான மாதாந்தர கூட்டத்தில், பல பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் சரியாக செயல்படவில்லை எனவும் சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப பணியாளர்களிடம் (Field Engineers) தகவல் தெரிவித்தபோதும் குறைகள் உரிய காலத்திற்குள் சரி செய்யப்படவில்லை எனவும் சில மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, உயர்தொழில் நுட்ப ஆய்வகங்களில் ஏற்பட்டுள்ள குறைகளை சரி செய்திடும் பொருட்டு அனைத்து மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள 6029 உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களின் தற்போதைய நிலை குறித்த விவரங்களை இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் பூர்த்தி செய்து இவ்வாணையரக "பிடி1" பிரிவு

Scanned by TapScanner

மின்னஞ்சல் முகவரிக்கு soft copy- யினையும் (pd1sec.dsc@gmail.com) மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் கையொப்பமிடப்பட்ட கடிதத்தினை 25.03.2022 தேதிக்குள் இவ்வாணையரகத்திற்கு உரிய படிவங்களுடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணை இயக்குநர் (தொழிற்கல்வி) 18/3/22

18/03/2022

இணைப்பு: படிவம் 1 & 2

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

Scanned by TapScanner